இன்னும் 2 மாதக் காலத்திலே, நடப்பு ஆண்டிலேயே இந்தக் குறைகள் எல்லாம் போக்கப்படுகின்ற வகையில் இந்தப் பல்கலைக் கழகம் பயன்படும் என்பதனை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து, லா கமிஷன்.

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்மிடத்திலே மாநிலச் சட்டங்கள்— ஸ்டேட் ஆக்ட்ஸ் — 598 இருக்கின்றன. சென்ட்ரல் ஆக்ட்ஸ் 1432 இருக்கின்றன. அந்தச் சட்டங்களிலே எவ்வளவோ ஓட்டைகள் இருக்கின்றன, குறைகள் இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் ரிப்பீல் செய்யவேண்டியவை இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் ஸ்பெண்ட் போர்ஸ் - ஆக இருக்கின்றன. இவைகளை எல்லாம், தூக்கி எறிந்துவிட்டு, சட்டங்களைத் திருத்தி நவீனப்படுத்துவதற்காக - ரிவிஷன் மற்றும் மாடர்னைசேஷன் - ஒரு ஸ்டேட் லா கமிஷனை உருவாக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவெடுத்திருக்கிறார்கள். அதனுடைய தலைமைப் பொறுப்பை ஏற்கும் நீதிபதியின் பெயரையும், அதிலே அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் பெயர்களையும் விரைவிலே மாண்புமிகு புரட்சித் தலைவி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க இருக்கிறார்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

4. அறிவிப்புகள் - தொடர்ச்சி

(இ) பேரவை அலுவல்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி பேரவை நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்ட மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

18.4.1994, திங்கட்கிழமை காலை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு சட்டப்புறம்பான அமைப்பு என்ற தடையாணையினை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்க சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்திய அரசை வலியுறுத்தும் அரசினர் தீர்மானம். தீர்மானத்தைத்

தொடர்ந்து ஏற்கெனவே அறிவித்துள்ளவாறு காலை மற்றும் மாலை, மானியக் கோரிக்கை எண் 17 - கல்வி மற்றும் மானியக் கோரிக்கை எண் 51 - தமிழ் வளர்ச்சி - பண்பாடு ஆகியவற்றின்மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

19.4.1994 செவ்வாய்க்கிழமை காலை, தேவையிருப்பின் மானியக் கோரிக்கை எண் 17 கல்வி மற்றும் மானியக் கோரிக்கை எண் 51 - தமிழ் வளர்ச்சி - பண்பாடு ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், பதிலுரையும் தொடரும்.

அதனைத் தொடர்ந்து உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பாக செய்யப்பட்ட அரசியல் சட்டத் திருத்தத்தை ஒட்டி 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்ட முன்வடிவு ஆய்வு செய்தலும், நிறைவேற்றலும்.

20.4.1994 புதன்கிழமை முதல் 29.4.1994 வெள்ளிக்கிழமை வரை ஏற்கெனவே அறிவிக்கப்பட்டவாறு.

30.4.1994 சனிக்கிழமை காலை மானியக் கோரிக்கை எண் 23 - கூட்டுறவு ; மாலை மானியக் கோரிக்கை எண் 28 - தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும். அதாவது 19 ஆம் தேதி எடுப்பதாக இருந்த இந்த 2 மானியக் கோரிக்கைகளும் 30 ஆம் தேதி எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

1.5.94 முதல் 5.5.94 வரை ஏற்கெனவே அறிவிக்கப்பட்டவாறு நிகழ்ச்சிநிரல் அப்படியே உள்ளது.

மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலுரையைத் தொடரலாம்.

8. மானியக் கோரிக்கைகள், 1994 – 95, விவாதமும் வாக்கெடுப்பும் – தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களும், மற்றவர்களும் வழக்கும் தேக்க —பெண்டன்சி – பற்றி இங்கே வலியுறுத்தி, துரிதமாக அவற்றைப் பைசல் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். உயர்நீதிமன்றம் நமக்கு அளித்த தகவலின்படி இன்றைக்கு 11 லட்சத்து 44 ஆயிரம் வழக்குகள் தேங்கியிருக்கின்றன. சென்ற ஆண்டு அது 10 இலட்சமாக இருந்தது. அதற்கு முன்னால் 15 இலட்சம். இன்றைக்கு உயர்நீதி மன்றம் துரிதமாகச் செயல்படுகிற காரணத்தால் 11,44,000 வழக்குகள் இந்த ஆண்டு தேங்கியிருக்கின்றன என்ற விவரத்தை அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இங்கு மட்டுமல்ல, இந்தியா எங்கும்